திரு. அ. ரஹ்மான்கான் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், மேலும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கும் என்று அறிவித்திருந்தார்கள். 23—10—1987 அன்று உத்தரவு போட்டார்கள். ஆனால் டிசம்பர் 16-ல் தேர்தலை ஒத்திவைத்து விட்டார்கள. காரணம் தெரியவில்லை. துணைத் தலைவர் அவர்களே, இதோடு நான் முடித்து விடுகிறேன்.. ஊராட்சி அதிகாரப் பறிப்பு இன்று நடப்பதைப் பற்றி இங்கே நான் சொல்லவேண்டும். நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டதெல்லாம், வரி விதிப்பு சம்பந்தமாகத் தீர்மானிப்பது யார்? மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன். மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர ஆர்.டீ.ஓ. டீ.ஆர்.ஓ. பி. டபிள்யூடி.-யில் இருக்கக் கூடிய இஞ்சினியர்கள், இரண்டு கௌன்சிலர்கள் போன்ற இவர்களைப் போட்டுக்கொண்டு அந்தக் காரியத்தை செய்வது என்பது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அவமானம் செய்வதாகும். நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். அவர் தீர்மானிப்பதற்குப் பதிலாக இரண்டு அதிகாரிகளை அந்தக் குழுவிலே போட்டு, முதலமைச்சரையும் அந்தக் குழுவிலே ஒரு ஆளாகப் போட்டு, தீர்மானித்தால் அது எப்படி வரும்? ஆகவே இது அதிகாரத்தைப் பறிப்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொன்றாகச் சொன்னால், மற்றவர்களும் கேட்பார்கள். 25 நிமிடமாயிற்று. அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

11. அரசினர் தீர்மானம் விதி 189 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு சட்டமன்றப் பேரவை 9-00 மணிக்குக் கூடிய காரணத்தினாலே 1-00 மணியோடு முடிக்கவேண்டுமென்ற விதி வைத்திருந்தது. இப்போது 9-00 மணிக்குப் பதிலாக நாம் 10-00 மணிக்கு கூடுகின்ற காரணத்தினாலே விதியைத் திருத்தத்தான் நாம் 1-00 மணியோடு என்பதை 2-00 மணியோடு முடித்தால் இன்னும் சில நண்பர்கள் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று கருதி, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''சட்டமன்றப் பேரவை விதி 189 (3)-ன் கீழ் துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் பிற்பகல் 1-00 மணியோடு முடித்தாக வேண்டுமென்பதைத் தளர்த்தி, அதை 2-00 மணி வரை நீடிக்கலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.